## மே– 28 – செவ்வாய்

### ஆண்டவரே! என் முழுமனத்துடன் உமக்கு நன்றி செலுத்துவேன்.திபா. 138:1

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி16 : 22 – 34

அந்நாட்களில் பிலிப்பு நகர் மக்கள் திரண்டெழுந்து அவர்களைத் தாக்கினார்கள். நடுவர்கள் அவர்களுடைய மேலுடைகளைக் கிழித்து அவர்களைத் தடியால் அடிக்க ஆணையிட்டார்கள். அவர்களை நன்கு அடித்துச் சிறையில் தள்ளிக்கருத்தாய்க் காவல் செய்யுமாறுசிறைக்காவலர் ஒருவருக்குக் கட்டளையிட்டார்கள். இவ்வாறு கட்டளை பெற்ற அவர் அவர்களை உட்சிறையில் தள்ளி, அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் உறுதியாய் மாட்டிவைத்தார்.நள்ளிரவில் பவுலும் சீலாவும் கடவுளுக்குப் புகழ்ப்பா பாடி இறைவனிடம் வேண்டினார். மற்ற கைதிகளோ இதனைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.திடீரென ஒருபெரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. சிறைக்கூடத்தின் அடித்தளமே அதிர்ந்தது. உடனே கதவுகள் அனைத்தும் திறந்தன. அனைவரின் விலங்குகளும் கழன்று விழுந்தன.சிறைக் காவலர் விழித்தெழுந்து, சிறைக்கூடத்தின் கதவுகள் திறந்திருப்பதைக் கண்டு, கைதிகள் தப்பி ஓடியிருப்பார்கள் என எண்ணி, வாளை உருவித் தற்கொலைசெய்துகொள்ள முயன்றார்.பவுல் உரத்த குரலில் அவரைக் கூப்பிட்டு, "நீர் உமக்குத் தீங்கு எதுவும் செய்து கொள்ளாதீர் நாங்கள் அனைவரும் இங்கேதான் இருக்கிறோம்" என்றார்.சிறைக் காவலர் உடனே ஒரு விளக்கைக் கொண்டுவரச் சொல்லி, விரைந்தோடி வந்து நடுங்கியவாறே பவுல், சீலா ஆகியோரின் காலில் விழுந்தார்.அவர்களை வெளியே அழைத்து வந்து, "பெரியோரே, மீட்படைய நான் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டார். அதற்கு அவர்கள், "ஆண்டவராகிய இயேசுவின் மேல் நம்பிக்கை கொள்ளும் அப்பொழுது நீரும் உம் வீட்டாரும் மீட்படைவீர்கள்" என்றார்கள்.பின்பு அவர்கள் ஆண்டவரின் வார்த்தையை அவருக்கும் அவர் வீட்டில் இருந்தோர் அனைவருக்கும் அறிவித்தார்கள்.அவ்விரவு நேரத்திலேயே அவர் அவர்களைக் கூட்டிச் சென்று அவர்களின் காயங்களைக் கழுவினார். பின்பு அவரும் அவரைச் சேர்ந்தவர்களும் திருமுழுக்குப் பெற்றார்கள்.அவர் அவர்களைத் தம் வீட்டுக்கு அழைத்துச் சென்று உணவு பரிமாறினார். கடவுள்மீது நம்பிக்கை கொண்டதால் தம் வீட்டார் அனைவரோடும் சேர்ந்து அவர் பேருவகை அடைந்தார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே! உமது வலக்கையால் என்னைக் காப்பாற்றுகிறீர்.

### நற்செய்தி : யோவான் 16 : 5 – 11

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது : "இப்போது என்னை அனுப்பியவரிடம் போகிறேன் ஆனால் உங்களுள் எவரும் "நீர் எங்கே போகிறீர்?" என்று என்னிடம் கேட்காமலேயேநான் சொன்னவற்றைக் குறித்து துயரத்தில் மூழ்கியுள்ளீர்கள்.நான் உங்களிடம் சொல்வது உண்மையே. நான் போவதால் நீங்கள் பயனடைவீர்கள். நான் போகாவிட்டால் துணையாளர் உங்களிடம் வரமாட்டார். நான் போனால் அவரை உங்களிடம் அனுப்புவேன்.அவர் வந்து பாவம், நிதீ, தீர்ப்பு ஆகியவை பற்றி உலகினர் கொண்டுள்ள கருத்துகள் தவறானவை என எடுத்துக்காட்டுவார்.பாவம் பற்றிய அவர்கள் கருத்து தவறானது ஏனெனில் என்னிடம் அவர்கள் நம்பிக்கைக் கொள்ளவில்லை.நீதி பற்றிய அவர்கள் கருத்து தவறானது நான் தந்தையிடம் செல்கிறேன் நீங்களும் இனி என்னைக் காணமாட்டீர்கள்.தீர்ப்பு பற்றிய அவர்கள் கருத்து தவறானது ஏனெனில் இவ்வுலகின் தலைவன் தண்டனை பெற்றவிட்டான்" என்றார்.

**தியானம் :** நாங்கள் மீட்கப்பட வேண்டுமானால் யாவற்றையும் விட்டுவிட்டு இறைவனைத் தேடும் பொழுது அம் மீட்பினைக் கண்டுகொள்ள முடியும். அம்மீட்பினைக் கணடுகொள்ள நாங்கள தயாராக உள்ளோமா? என்பதை சிந்திக்கவே இன்றைய தியான வாசகங்கள் எங்களை அழைத்து நிற்கின்றது. இன்றைய முதல் வாசகத்தில் தீய ஆவி பிடித்து குறி சொல்லும் ஒருவரைப் பார்க்கின்றோம். அவர் அங்குள்ள மக்களுக்கு கிறிஸ்துவுக்கு எதிரான வகையில் குறி சொல்லியும், அதன் மூலம் யாவும் நடைபெறுவது போன்றும் அறிவித்து வந்தார். உடனே பவுலும் சீலாவும் இயேசுவின் பெயரால் கடிந்து செபித்து தீய ஆவியை வெளியேற்றுகிறார்கள். பவுலும், சீலாவும் கிறிஸ்துவைப்பற்றியும், தாங்கள் அவர் வழியாகவும் செய்கின்றோம் என்று கூறியும் சிலர் நம்பிக்கையற்றவர்ளாக இருந்தார்கள், அன்று இயேசு சீடர்களின பாதங்களைக் கழுவி பரிசுத்தப்படுத்தியும் தான் செய்வது போல் நீங்களும் செய்யுங்கள் என்று கூறி அவர் மன்னிப்பின் தன்மையை வெளிப்படுத்துகிறார். அதே போன்று பவுலும். சீலாவும் மனந்திருந்தியவர்களின் கால்களைக் கழுவி திருமுழுக்குக் கொடுத்து பரிசுத்ததப்படுத்தினார்கள். இன்று எங்களிலும் சிலர் இவ்வாறான குறி பார்த்தல், சாஸ்திரம் கேட்டல், மந்திருத்து நூல் கட்டுதல், செய்வினை, சூனியம் என்று அதை நம்பியவர்களாக வாழ்ந்து பரிசுத்தத்தை இழந்து இறைவனின் மீட்பை கண்டடைய தவறிவிடுகிறோம். "ஆண்டவர் இயேசுவில் நம்பிக்கை கொண்டு வாழும் ஒவ்வொருவரும் மீட்படைவர்" (தி. ப. 16:31). எனவே நாங்கள் இவ்வாறான தீய பாவ காரியங்களில் நின்று விடுபட்டவர்களாக இறைவன் மேல் நம்பிக்கை கொண்டவர்களாக அவரது மீட்பை கண்டடைய எங்களைத் தயார்படுத்துவோம்.